[2015 பிப்ரவரி 19

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி செல்லக்கூடிய கிழக்குக் கடற்கரை சாலையிலே சர்க்கரைகோட்டை கண்மாய்ப் பகுதியிலே சாலைகள் மிகச் சிறப்பாகச் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைக் கடந்த பிறகு, கீழக்கரை வரை, அதைத் தாண்டிய பிறகும்கூட, கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் பழுதுபட்ட நிலையிலே இருக்கிறது. அதைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நிதிநிலைமைக்கேற்ப சாலைகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை பழுதடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப அந்தச் சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

புதிய கட்டடம்

***46821—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு ரூபாய் 7.5 கோடி செலவில் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு, சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்திலேயே இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வளம் கொண்ட நாட்டுக்கு வறுமை தந்த அரசியலை, சுத்திகரிப்பு செய்திடவே, சூளுரைக்கும் சுடரொளியே! மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சாதியும், சதியும் மதப் பகையும் இல்லா சமத்துவ தேசம்காண சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியமே! தேசம் காத்திட தேன் தமிழ் ஈந்த திராவிடத்துப் பாதையே! திருவரங்கத்து கீதையே! ஈரடியால் உலகளந்த இறைவன், ஈரிலையால் தேசம் ஆள ஈன்றிட்ட பேரறிவே! ஈகையின் இயக்கமாகி, வாகையே இலக்காக்கி, அன்பை அறமாக்கி, ஆற்றலை ஆயுதமாக்கி, அரசாட்சி நடத்தி வரும் அன்னைத் திருமகளே! பெரியாரின் பேரறிவும், அண்ணாவின் கனிவும், மக்கள் திலகத்தின் பரிவும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் சூதுமதியை வென்றிடுவார்; நிச்சயம் வெற்றி பெறுவார்; தமிழ் மண்ணைக் காத்திடுவார், 10 கோடி தமிழ் மக்களையும் காத்திடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் இந்த அவைக்கும் வந்திடுவார், தலைமையும் ஏற்பார், நிச்சயம் தலைமை ஏற்பார். (மேசையைத்

தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவாற்றலால், தூய்மையான தொண்டு உள்ளத்தால் நேற்று 37 பாராளுமன்ற உறுப்பினர்கள், இன்று ஸ்ரீரங்கம், நாளை 234 சட்டமன்ற உறுப்பினர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியம்; வெல்வது நிச்சயம் என்று கூறி இரு கரம் கும்பிட்டு வணங்குகிறேன். கும்பிட்ட கைகள் விலகும் முன்பே வான்மழை பொய்த்தாலும், வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை நிரூபிக்கும் வகையில், சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

19—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***38295—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சி, புதுச்சேரிமேடு பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுச்சேரிமேடு முதன்மை அங்கன்வாடி மையம் 1982–ல் துவக்கப்பட்டு, தனியார் வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குக் கட்டடம் கட்ட சர்வே எண் 366–ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிட்டா அடங்கலும் பெறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்கீழ் இந்த